## முதன்மை மாவட்ட நீதிமன்றம், விருதுநகர் மாவட்டம் (இருப்பு) ஸ்ரீவில்லிபுத்தூர்.

OS.No.72/2017

21.01.2021

**வா.சா.1 சகாதேவராஜா என்பவர் ஆஜராகி சத்திய பிரமாணத்தின் பேரில் குறுக்கு விசாரணை செய்யப்படுகிறார்.**

**கு.வி தொடர்ச்சி**

1ம் பிரதிவாதி சங்கத்தில் தற்போதுள்ள உறுப்பினர்கள் பற்றிய விபரம் எனக்கு தெரியாது. 1ம் பிரதிவாதி சங்கத்தில் உள்ள உறுப்பினர்கள் முதல் பங்காளி வகையறாக்களை சேர்ந்தவர்கள் என்றால் சரிதான். 1ம் பிரதிவாதி சங்கத்தில் சுமார் 250 முதல் 300 வரை உறுப்பினர்கள் இருப்பார்கள் என்றால் சரியல்ல. 175 உறுப்பினர்கள் இருக்கிறார்கள். 1ம் பிரதிவாதி சங்கத்தில் தான் பழைய தீர்மானபுத்தகங்கள், பழைய கணக்குபுத்தகங்கள் உள்ளது என்றால் சரிதான். 100 வருடகாலமாக உள்ள ரிக்காடுகள் எல்லாம் 1ம் பிரதிவாதி சங்கத்திடம் உள்ளது என்றால் சரிதான். சொத்துக்களுக்குண்டான பத்திரம் எல்லாம் 1ம் பிரதிவாதி வகையறா சங்கத்தில் உள்ளது என்றால் சரிதான். ஆரம்ப காலத்திலிருந்து தபசில் சொத்துக்களுக்குரிய பட்டா ஆவணங்கள் எல்லாம் 1ம் பிரதிவாதி சங்க வகையறாக்களிடம் இருந்து வந்துள்ளது என்றால் சரிதான். நான் வழக்கில் தாக்கல் செய்துள்ள ஆவணங்கள் அனைத்தும் வாதி சங்கம் பதிவு செய்யப்பட்ட பின்னர் உள்ள ஆவணங்கள் என்றால் சரிதான். வாதி சங்கமாகிய இராஜபாளையம் பழையபாளையம் கொட்டிமுக்கலூர் சத்திரிய ராஜுக்கள் பெரியசாவடி மூன்று பாகஸ்தர்களின் சங்கம் பதிவு செய்யப்படுவதற்கு முன்னர் மேற்படி சங்கம் பெயரில் எந்தவித

ஆவணமும் கிடையாது என்றால் சரிதான். வாதி சங்கத்தை பதிவு செய்ய ஏற்பாடு செய்தது நான் தான் என்றால் சரிதான். வாதி சங்கத்தை பதிவு செய்த தேதி 03.11.2011 என்றால் சரிதான். பதிவு செய்த சமயத்தில் வாதி சங்கத்தில் 47 உறுப்பினர்கள் என்றால் சரிதான். அதில் முதல் பங்காளி வகையறாக்களில் 17 பேர் உறுப்பினர்கள். 2வது 3வது பங்காளி வகையறாக்களில் தலா 15 பேர் உறுப்பினர்கள். 2வது 3வது பங்காளிகளில் தலா 15 பேர் உறுப்பினர்கள் என்பதற்கு ரிக்கார்டு உள்ளது. சொத்து பத்திரங்களின் அடிப்படையில் தான் 2வது மற்றும் 3வது பங்காளிகள் என நான் சொல்லி வருகிறேன் என்றால் சரியல்ல. 2வது மற்றும் 3வது பங்காளிகள் பெயரில் எந்தவிதமான பத்திரங்களும் இல்லை என்றால் சரிதான். 2வது மற்றும் 3வது பங்காளிகள் எந்தெந்த சொத்துக்களை தங்களது பெயரில் அனுபவித்து வந்தார்கள் என்பதற்கும் ரிக்காடுகள் இல்லை என்றால் சரிதான். 2வது பங்காளியில் இன்னார் தான் தலைவராகவோ செயலாளராகவோ இருந்து வந்ததாக குறிப்பிட்டு பிராதிலோ நிரூபன வாக்குமூலத்திலோ சொல்லவில்லை என்றால் சரிதான். 3வது பங்காளியில் இன்னார் தான் தலைவராகவோ செயலாளராகவோ இருந்து வந்ததாக குறிப்பிட்டு பிராதிலோ நிரூபன வாக்குமூலத்திலோ சொல்லவில்லை என்றால் சரிதான். நான் 2011 வரையில் 1ம் பிரதிவாதி சங்கத்தில் உறுப்பினர் என்றால் சரிதான். இதுவரையில் 1ம் பிரதிவாதி சங்கத்தில் நான் உறுப்பினராக இல்லை என தெரிவித்து அறிவிப்பு எதுவும்

கொடுக்கவில்லை என்றால் சரிதான். அதேபோல் முதல் பங்காளி வகையறாவில் உள்ள 17 உறுப்பினர்களும் 1ம் பிரதிவாதி சங்கத்தில் உள்ள உறுப்பினர் பொறுப்பிலிருந்து விலகுவதாக இதுவரையில் தெரிவிக்கவில்லை என்றால் சரிதான். வாசாஆ1 பத்திரத்தில் உள்ளவர்கள் அனைவரும் முதல் பங்காளி வகையறாக்களை சேர்ந்தவர்கள் என்றால் சரிதான். வாசாஆ1 பத்திரத்தில் முதல் பங்காளி வகையறா சில தர்மங்களை செய்ய வேண்டும் என காட்டியுள்ளது என்றால் சரிதான். அது போக சில சொத்துக்களை அவர்கள் பிரித்துக் கொண்டதாக வாசாஆ1 பத்திரத்தில் கண்டுள்ளது என்றால் சரிதான். தர்மம் செய்ய வேண்டும் என்பது வேட்டைவெங்கடேசபெருமாள்கோவில் வருஉஷாபிஷேக செலவுகளை செய்ய வேண்டும் என வாசாஆ1ல் காட்டப்பட்டுள்ளது என்றால் சரிதான். மேலும் மாடசாமிகோவிலில் தவணைபூஜை செய்ய வேண்டும் என்றும் உள்ளது. அது போக பெரியகுடும்பத்தை சேர்ந்தவர்களுக்கு படிப்பு செலவு, திருமணசெலவு செய்ய வேண்டும் எனவும் வாசாஆ1ல் சொல்லப்பட்டுள்ளது என்றால் சரிதான். நான் சங்கத்தை பிரித்த பிறகு தர்மங்கள் 1ம் பிரதிவாதி சங்கத்தால் இதுவரையில் செய்யப்படவில்லை என்றால் சரிதான். தர்மங்கள் பற்றி தாவா வழக்கில் குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் சரியல்ல. பிராது 13வது பக்கத்தில் 18வது பாராவில் சொல்லியுள்ளேன். அதில் மேற்படி தர்மகாரியங்களை செய்து வரவேண்டியது வாதி சங்கத்தின் நோக்கமாகும் என சொல்லியுள்ளேன் என்றால் சரிதான். பிராதில் 9 அயிட்ட சொத்துக்கள்

காட்டியுள்ளதில் அது யார் யாரால் கிரையம் வாங்கப்பட்டது என்பதற்கு ஆவணங்கள் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். வாசாஆ49, வாசாஆ50 ஆவணங்கள் 3வது இலக்க சொத்தை 18 மற்றும் 19ம் பிரதிவாதி கிரையம் பெற்றதற்கான கிரைய பத்திர நகல் மட்டும் தாக்கல் செய்துள்ளேன். தாவா சொத்துக்களுக்கு ஆதியில் ஆவணங்கள் எதுவும் கிடையாது. அது பூர்விக சொத்துக்களாக அனுபவம் செய்து வரப்பட்டது. பூர்விக சொத்துக்களுக்கு கிரைய ஆவணங்கள் இல்லாத பட்சத்தில் பட்டா ஆவணங்கள் இருக்கும் என்றால் சரிதான். 9 அயிட்ட சொத்துக்களுக்கும் மூன்று பங்காளிகள் பெயரில் 2011க்கு முன்னர் பட்டா எதுவும் இல்லை என்றால் சரிதான். 2வது அயிட்ட சொத்தினை 1976ல் முதல் பங்காளி வகையறாக்கள் கிருஉஷ்ணமராஜா என்பவருக்கு வாசாஆ47ன் படி கிரையம் செய்து கொடுத்துள்ளார்கள் என்றால் சரிதான். ஆனால் அந்த கிரையம் தவறு. அந்த கிரையம் நடக்கும் போது முதல் பங்காளி வகையறாவில் நான் ஒரு உறுப்பினர் என்றால் சரிதான். கிருஉஷ்ணமராஜா இறந்துவிட்டார். அவர் இறந்த பிறகு வாசாஆ47ன் படி கிரையம் பெற்ற சொத்தை அவரது வாரிசுகள் அனுபவித்து வருகிறார்கள் என்றால் சரிதான். அச்சொத்துக்களுக்கான பட்டாக்கள் வாரிசுகள் பெயரில் மாறியுள்ளது என்றால் சரிதான். கிருஉஷ்ணமராஜாவிற்கு ஒரு மனைவி, 3 பிள்ளைகள். கிருஉஷ்ணமராஜாவின் மகனை மட்டும் நான் இவ்வழக்கில் தரப்பினராக சேர்த்துள்ளேன் என்றால் சரிதான். மற்ற வாரிசுகளை நான் எதனால்

இவ்வழக்கில் தரப்பினராக சேர்க்கவில்லை என்ற காரணத்தை குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் சரிதான். பெண்கள் என்பதால் சேர்க்கவில்லை. 3வது தபசில் சொத்து 1986ல் முதல் பங்காளி வகையறாவால் 17, 18, 19 பிரதிவாதிகளுக்கு வாசாஆ49ன் கிரையம் செய்யப்பட்டுள்ளது என்றால் சரிதான். கிரையம் பெற்றது முதல் 17, 18, 19 பிரதிவாதிகள் தான் அச்சொத்தை அனுபவித்து வருகிறார்கள் என்றால் சரிதான். இந்த காலகட்டத்திலும் முதல் பங்காளி வகையறாக்களில் நான் ஒரு உறுப்பினர் என்றால் சரிதான். 4வது தபசில் சொத்துக்குரிய பட்டா முதல் பங்காளி வகையறாக்கள் பெயரில் உள்ளது என்றால் சரிதான். அது வாசாஆ19. 5வது தபசில் சொத்துக்குரிய பட்டா முதல் பங்காளி வகையறாக்கள் பெயரில் உள்ளது என்றால் சரிதான். அது வாசாஆ20. 6வது தபசில் சொத்துக்குரிய பட்டா முதல் பங்காளி வகையறாக்கள் பெயரில் உள்ளது என்றால் சரிதான். அது வாசாஆ21. 7வது தபசில் சொத்துக்குரிய பட்டா முதல் பங்காளி வகையறாக்கள் பெயரில் உள்ளது என்றால் சரிதான். அது வாசாஆ22. நான் சங்கம் ஆரம்பித்த பிறகு சங்கம் பெயருக்கு பட்டா மாற்றம் செய்யக்கோரி வருவாய்துறையில் மனு கொடுத்தேன் என்றால் சரிதான்.

**வழக்கறிஞர் கேட்டுக்கொண்டதற்கிணங்க குறுக்கு விசாரணை தொடர்ச்சி வேறொரு தேதிக்கு ஒத்தி வைக்கப்படுகிறது.**